Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. 2, SIVAKASI
CC NO. 141/2020

**Depostitions of PW 1 Witness for**

| | |
|---|---|
| Name | செந்தில்வேல் |
| Father's name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 29 day of June 2022.

Signature of Witness.

| | |
|---|---|
| Name of the Interpreter | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 2022.

Signature of Interpreter.

**29.6.2022**

**முதல் விசாரணை**

நான் தற்போது சாத்துார் வெங்கடாசலபுரத்தில் குடியிருந்து வருகிறேன். பாரைப்பட்டியில் பட்டாசு கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். கடந்த 6.12.2019 ம் தேதி மாலை 3 மணி அளவில் என் கடையில் வேலை பார்த்து வந்த சீனிக்குமார் என்பவர் பூட்டி இருந்த கடை திறந்து கிடப்பதாக தகவல் சொன்னார். உடனே கடைக்கு சென்று போய் பார்த்த போது

கடைக்குள் இருந்த பட்டாசுகள் மற்றும் கம்பி மத்தாப்புகள் ஆகியவை திருடுபோய் இருந்தது . பல இடங்களில் தேடியும் கிடைக்காததால் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க கோரி காவல் நிலையத்தில் ஒரு புகார்மனு கொடுத்தேன். புகார்மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார்மனு அசாஆ 1 ஆகும். 7.12.2019 ம் தேதி காவல் நிலையத்திலிருந்து கிடைத்த தகவலின் பேரில் காவல் நிலையம் சென்று திருடுபோன பட்டாசுகளை அடையாளம் காட்டினேன். மேற்படி பட்டாசுகளை திருடிய நபர்களை நான் பார்க்கவில்லை. என்னிடம் காட்டப்படும் இரண்டு புகைப்படங்களில்உள்ள பட்டாசு பெட்டிகள் தான் திருடுபோய் இருந்தது. பட்டாசு பெட்டிகள் சாபொ 1 மற்றும் சாபொ 2 ஆகும். பின்னர் நீதிமன்றத்தில் மனு செய்து திருடுபோன என் பட்டாசுகளை திரும்பபெற்றுச் சென்றேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

நான் சொன்ன நாள் சொன்ன நேரத்தில் பட்டாசுகள் திருடுபோகவில்லை என்றும் நான் சொன்ன நாள் சொன்ன நேரத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.